# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்கள் முன்பாக

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*************

முறையீட்டு மனு எண்.0199/2015

ஆணை எண்.0002/2015

நாள்: 15/09/2015

திரு.ஏ. மாரிமுத்து,
தலைவர், இந்திய கம்யூனிஸ் கட்சி,
மாரியம்மன் கோயில் தெரு,
கோட்ட மருதூர்,
திருக்கோவிலூர் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

- முறையீட்டு மனுதாரர்கள்

திருமதி. அலமேலு (ம) ஊராட்சிமன்றத் தலைவி,
திரு. பழனிவேலு,
ஊராட்சிமன்றச் செயலாளர்,
கோட்டமருதூர் கிராமம்,
திருக்கோவிலூர் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

- எதிர் மனுதாரர்

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், கோட்ட மருதூர் ஊராட்சியைச் சேர்ந்த திரு. ஏ. மாரிமுத்து மற்றும் சிலரும் கூட்டாக கையொப்பமிட்ட மனுவில் மேற்படி ஊராட்சி மன்றத் தலைவி மற்றும் கிராம செயலாளர் குறித்து புகார் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி மனு ஒன்றினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ளார். மேற்படி மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.09.2015 அன்று பெறப்பட்டு மனு எண்.199-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# ஆணை

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவு 2-க்கு உட்பட்ட உட்பிரிவுகள் (7) மற்றும் (11)ல் உள்ளாட்சி அமைப்புகள் (ம) பொதுப்பணியாளர் என்பதற்கு அளிக்கப்பட்ட விளக்கத்தில், ஊராட்சி மன்ற அமைப்பு (ம) ஊராட்சி பிரதிநிதிகள் இடம் பெறவில்லை. எனவே, விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம் ஊராட்சிமன்றத் தலைவி மற்றும் செயலாளர் மீதான புகார்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வது இம்முறைமன்ற நடுவரின் விசாரணை வரம்பிற்கு உட்படாது. எனவே மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ள முறைகேடுகள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, புகார் மனுவினை விழுப்புரம் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்க தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அமைப்பு முடிவு செய்து அதன் அடிப்படையில் முறையிட்டு மனு முடித்துவைக்கப்படுகின்றது.

ஒம்/– முனைவர் சோ. அய்யர்
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் சென்னை–600 032

//உண்மை நகல் / உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது//

15/7/15
கண்காணிப்பாளர்

பெறுநர்

மாவட்ட ஆட்சியர்,
விழுப்புரம் மாவட்டம்,
விழுப்புரம் (இணைப்புடன்)

நகல்

திரு. ஏ. மாரிமுத்து,
மாரியம்மன் கோயில் தெரு,
கோட்ட மருதூர் அஞ்சல்,
முகையூர் ஊராட்சி ஒன்றியம்,
திருக்கோவிலூர் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.